**மண்சரிவு விபரீதங்களிலிருந்து பாதுகாத்தல் செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------

மண்சரிவு விபரீதங்களிலிருந்து பாதுகாத்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்குமிடையெ கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய ஒப்பந்த பத்திரத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய துறைமுகங்கள், பெருந்தெருக்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சாகிய தற்போதைய போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகணங்களிலுள்ள உயர் நிலப் பிரதேசங்களில் பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பான தேசிய வீதிகளுக்கு ஏற்படும் மண்சரிவு விபரீதங்களை குறைப்பதும் அதன் மூலம் வீதிப் பாவனையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களை உள்ளடக்கி மக்களின் உயிர்களைப் பாதுகாத்தல், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல், மற்றும் வீதி வலையமைப்பின் பாதுகாப்பினை மேம்படுத்துதலுமாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது பொதி 01 மற்றும் பொதி 02 என்பனவாக இரண்டு கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,201.2 மில்லியனுக்குச சமனான யு.எஸ் டொலர் 122.6 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 12,870.45 மில்லியனுக்குச் சமமான யு.எஸ் டொலர் 97.4 மில்லியனை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவராண்மை நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 3,331 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2013 யூலை 05 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் தொடக்கத்தில் 2020 யூலை 05 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் திகதி இன்னும் இரண்டு ஆண்டுகளினால் நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில்நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடுகள்/ கணக்காய்வு அவதானிப்புக்கள் | தொகை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 05 இன் 43(அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி நிலைமை கூற்றின் பணரீதியான சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதிநிலைமைக் கூற்றுத் திகதியில் உள்ளவாறான இறுதி வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தில் பரிமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். எனினும் செயற்திட்டத்தின் கடன் மீதி தொடர்பான ரூபா 7,522 மில்லியன் தொகையான சமப்பாட்டு செம்மையாக்கல் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 7,522 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் உள்ளபடியான பண அளிப்புத் தொகை கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது டன் அதற்கிணங்க நாணயமாற்று வித்தியாசங்கள் கணிப்பீடு செய்யப்பட்டது. எனவே குறித்த தொகை எங்கள் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை/ கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | 01/2019 ஆம் இலக்க 2019 மார்ச் 15 ஆந் திகதிய முகாமைத:துவ கூற்றறிக்கையின் 9.3 ஆம் உப உறுப்புரை | மீளாய்வாண்டில் ஒழுங்குபடுத்தல் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. | தேவைப்படும் போது இணையவழி தொழில்நுட்பத்தினூடாக (ZOOM) செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்பட்டது. | முகாமைத்துவ சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கி நடத்தல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களின் அனுபவமின்மை மற்றும் அவர்களால் பாதுகாப்பு ஏற்பாடுகளை விளங்கி கொள்ளாமை மற்றும் அதிகரிக்கும் மண்சரிவு எதிர்ப்பு நடவடிக்கைகளின் காரணமாக இச்செயற்திட்டத்தின் தொகுதி "A" மற்றும் தொகுதி "B" இன் கீழுள்ள நிர்மாணங்களின் பூர்த்தியாக்கல் காலம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தாமதமடைந்திருந்தது. எனவே செயற்திட்டம் கடன் காலப்பகுதியில் மொத்த கடன் தொகையான ஜப்பான் யென் 7,619 மில்லியனில் ஜப்பான் யென் 6,283 மில்லியனை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. ஆகவே கடன் காலப்பகுதி பூர்த்தியடையும் போது பயன்படுத்தப்படாத கடன் மீதிக்காக செலுத்தப்படும் கடப்பாட்டுக் கட்டணம் சிக்கனமற்றது என அவதானிக்கப்பட்டது. | இச்செயற்திட்டத்தின் விடயப்பரப்பானது தொகுதி "A" மற்றும் தொகுதி "B" இன் கீழ் 16 மண்சரிவு அமைவிடங்களாக இருந்தது. மேலும் 16 மண் சரிவு அமைவிடங்களை பூர்த்திசெய்வதற்கு மேலதிகமாக கடன் தொகையில் ஜப்பான யென் 1000 மில்லியனுக்கு மேல் சேமித்து செயற்திட்ட காலப்பகுதிக்குள் 07 மேலதிக மண்சரிவு அமைவிடங்கள் பூர்த்திசெய்யப்பட்டன. | கடன் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மண்சரிவு அறிவிப்புக்களை முனனராகவே அடையாளம் கண்டு கொள்வதற்காக இச்செயற்திட்டத்தின் கீழ் ரூபா 30 மில்லியனை செலவு செய்து (EWS) தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த முறைமையானது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மீளாய்வாண்டின் இறுதிவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே இந்த முறைமைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு சிக்கனமற்றதாக மாறியிருந்தது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனமும் (NBRO) வீதி அபிவிருத்தி அதிகார சபையும் (RDA) இணைந்து இச்செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகினை தாபித்தல் வேண்டும். எனவே முன்கூட்டிய எச்சரிப்பு செயற்திறனாக செயற்படுவதுடன் கடன் உடன்படிக்கைக்கு இணங்க NBRO இனால் இது பயன்படுத்தப்படுவதனால் NBRO இன் மூலம் உச்ச அளவு நலன் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முன்கூட்டிய எச்சரிப்பு முறைமையை (EWS) பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |